THE EDUCATION STATE

EARLY CHILDHOOD

# நிலைமாற்றம்: பாடசாலைக்குச் செல்ல ஏற்புறுதியான ஒரு தொடக்கம்

குடும்பங்களுக்கான தகவல் தாள்

**நீங்களும் உங்களுடைய குழந்தையும் உங்களை இந்த வருடத்திற்குப் பரிச்சயமாக்கிக் கொள்கையில், பாடசாலைக்குச் செல்லத் தொடங்குவது என்பது நீண்டதொரு பயணமாகத் தெரிகிறது. பாடசாலைக்குச் செல்லத் தொடங்குவது என்பது சவாலானதும் பரபரப்பானதும் ஆகும். இந்தத் தகவல் தாளானது வருடம் கடந்து செல்கையில் பாடசாலைக்கான நிலைமாற்றத்திற்கு உங்களுடைய குழந்தையின் ஆரம்பகாலக் குழந்தைப்பருவ நிகழ்ச்சி எப்படி உங்களுக்கும் உங்களுடைய குழந்தைக்கும் ஆதரவளிக்கும் என்பது பற்றிய சில தகவல்களை வழங்கும்.**

உங்களுடைய குழந்தை ஏற்கனவே வாழ்க்கையில் பல சிறியதும் பெரியதுமான நிலைமாற்றங்களை எதிர்கொண்டுள்ளார். புதிய/குறைந்த பரிச்சயமான சுற்றாடல்களுக்கு உங்களுடைய பிள்ளை எப்படி எதிர்த்தாக்கம் புரிகிறார் (உதாரணமாக, நீங்கள் விடுமுறைக்குச் செல்லும் போது, குழந்தைப் பராமரிப்பு அல்லது பாலர் பாடசாலைக்குச் செல்லத் தொடங்கும் போது, விளையாட்டு நிகழ்வுகளுக்குச் செல்லும் போது, ஒரு செயற்பாட்டிலிருந்து அல்லது வழக்கமான செயற்பாட்டிலிருந்து அடுத்த செயற்பாட்டுக்கு நிலைமாறும் போது கூட) என்பது, உங்களுடைய குழந்தையானது புதிய சூழ்நிலைகளுக்கு எப்படிச் செயற்படுகிறார் மற்றும் அவற்றுக்கு எவ்வளவு சிறப்பாக ஆதரவளிக்கிறார் என்ற ஒரு உருப்படத்தை வழங்குகிறது.

## பாடசாலைக்குச் செல்ல ஏற்புறுதியான ஒரு தொடக்கம் ஏன் முக்கியம்?

பாடசாலைக்குச் செல்ல ஏற்புறுதியான ஒரு தொடக்கம் இருப்பது, நிலைமாற்றம் மற்றும் அதற்கு அப்பாலான காலகட்டம் ஆகிய இரண்டின் போதும் உங்களுடைய குழந்தைக்கு சிறந்த கற்றலுக்கும் நலவாழ்வுப் பலன்களுக்கும் வழிவகுக்கும். இது உங்களுடைய குழந்தையின் தொடர்ச்சியான கற்றல் மற்றும் அபிவிருத்திக்கு ஆதரவளிக்க உதவுவதோடு, புதியவர்களையும் புதிய இடங்களையும் பார்க்கும் போது அவர்களுக்கு பாதுகாப்பான, நம்பிக்கையான, ஈடுபாடான உணர்வை ஏற்படுத்தவும் உதவும்.

## உங்களுடைய குழந்தையைப் பாடசாலையில் சேர்த்தல்

பெரும்பாலான பாலர் பாடசாலைகள், குழந்தைகள் பாடசாலைக்குச் செல்லத் தொடங்குவதற்கு முன்னுள்ள வருடத்தின் மே மாதத்தில் தமது சேர்க்கைச் செயற்பாடுகளை ஆரம்பிக்கின்றன. உங்களுடைய குழந்தையைப் பாடசாலையில் சேர்க்கும் போது, பாடசாலைக்கு நிலைமாறுதல் குறித்த நிகழ்ச்சிகள் மற்றும் செயற்பாடுகளின் ஊடாக பாடசாலையைப் பற்றித் தெரிந்துகொள்ளும் வாய்ப்புகளை அதிகரித்துக் கொள்ளலாம். மிகவும் வினைத்திறனான நிலைமாற்றங்கள் ஆனவை வருட முடிவுக்கு முன்பாக நன்கு தொடங்கி, பாடசாலை தொடங்கிய பின் முதல் சில நாட்கள் வரை நீடிக்கின்றன.

## பாடசாலைக்கு நிலைமாறுதல் குறித்த நிகழ்ச்சிகள் மற்றும் செயற்பாடுகள்

பாடசாலைக்கு நிலைமாறுதல் குறித்த நிகழ்ச்சிகள் மற்றும் செயற்பாடுகளில் பங்குபற்றுவது, பாடசாலை எதைப் போல இருக்கும் என்று சிறப்பாக விளங்கிக் கொள்வதற்கும், பாடசாலைக்கு வரவுள்ள இதர குழந்தைகள் மற்றும் குடும்பங்களுடன் சினேகிதங்களை வளர்த்துக் கொள்வதற்கும் உங்களுக்கும் உங்களுடைய குழந்தைக்கும் உதவும்.

---

## TRANSITION LEARNING AND DEVELOPMENT STATEMENT (நிலைமாற்றக் கற்றல் மற்றும் வளர்ச்சி அறிக்கை)

உங்களுடைய குழந்தையின் ஆரம்பகட்ட குழந்தைப்பருவ ஆசிரியர் *Transition Learning and Development Statement* (நிலைமாற்ற அறிக்கை -

VICTORIA State Government | Education and Training

Transition Statement) ஒன்றை எழுதுவார். இந்த நிலைமாற்றநிலைமாற்ற அறிக்கையானது உங்களுடைய குழந்தையின் ஆர்வங்கள், திறமைகள், ஆற்றல்கள் ஆகியவற்றைத் தொகுத்துக் கூறும். இது தனிப்பட்ட அணுகுமுறைகளையும் கற்பித்தல் உத்திகளையும் கூட அடையாளப்படுத்திக் காட்டும், இதனால் உங்களுடைய குழந்தையின் பாடசாலையும் அடுத்த வகுப்பின் ஆசிரியரும் உங்களுடைய குழந்தையைப் பற்றி விரைவாக அறிந்துகொண்டு, பொருத்தமான கற்றல் மற்றும் கற்பித்தல் நிகழ்ச்சிகளைத் திட்டமிட முடியும்.

உங்களுடைய குழந்தையை பாடசாலை இல்லாத நேரங்களில் கவனிக்கும் (Outside School Hours Care - OSHC) சேவைக்கு அனுப்பத் திட்டமிடுகிறீர்கள் என்றால், இந்த நிலைமாற்றநிலைமாற்ற அறிக்கையை OSHC சேவையுடனும் பகிரலாம். உங்களுடைய குழந்தையின் ஆர்வங்களுக்கு ஏற்பத் திட்டமிடவும், ஆரம்பகட்ட குழந்தைப் பருவம், பாடசாலை மற்றும் OSHC ஆகியவற்றுக்கு இடையில் தொடர்ச்சி இருக்குமாறு செய்யவும் OSHC பயிற்றுநர்களுக்கு நிலைமாற்றநிலைமாற்ற அறிக்கை உதவும்.

உங்களுடைய குழந்தை, பாடசாலைக்கு நிலைமாறும் போது, அவரது கற்றல் பற்றி விளங்கிக்கொள்ள, அதற்கு ஆதரவாக இருக்க, அதைப்பற்றித் தகவலறிய மற்றும் ஆதரித்துப் பேச, நிலைமாற்ற அறிக்கை உங்களுக்கு உதவலாம். உங்களுடைய குழந்தையின் பூர்த்தி செய்த நிலைமாற்ற அறிக்கையின் பிரதி உங்களிடம் வழங்கப்படும்.

உங்களுடைய குழந்தையின் நிலைமாற்ற அறிக்கையில், உங்களுடைய குழந்தையின் பெயர், பிறந்த திகதி மற்றும் புகைப்படம் உட்பட அவரைப் பற்றிய சில தனிப்பட்ட தகவல்களும் உங்களுடைய பெயர் மற்றும் தொடர்பு விபரங்களும் இருக்கும். பொருத்தமானதாக இருந்தால், இதில் உங்களுடைய குழந்தைக்கு ஆதரவளிக்கின்ற இதர ஆரம்பகட்ட குழந்தைப்பராய நிபுணர்களின் பெயர் மற்றும் தொடர்பு விபரங்களும் கூட இருக்கும்.

நிலைமாற்ற அறிக்கைகள் வழக்கமாக 4ஆம் தவணையில் எழுதப்படுகின்றன, ஆனாலும் உங்களுடைய குழந்தைக்கு இயலாமை அல்லது வளர்ச்சியில் தாமதம் இருந்தால், சேர்க்க வேண்டிய ஆதரவுகள் பற்றி உங்களுடனும் உங்களுடைய குழந்தையின் தேர்வுசெய்த பாடசாலையுடனும் உரையாடலைத் தொடங்கும் வகையில் யூன்/யூலை மாதமளவில் முன்கூட்டிய நிலைமாற்ற அறிக்கையை உங்களுடைய குழந்தையின் ஆரம்பகட்ட குழந்தைப்பருவப் பயிற்றுநர் எழுதக் கூடும்.

உங்களுடைய குழந்தையைப் பற்றி உங்களுக்குத் தான் மிக அதிகளவில் தெரியும் என்பதால், அறிக்கைக்கு உங்களுடைய பங்களிப்பு பெறுமதியானது. நிலைமாற்ற அறிக்கையின் ஒரு பிரிவை நிரப்புமாறு அழைக்கப்படுவீர்கள். நிலைமாற்ற அறிக்கையின் இந்தப் பிரிவை நிரப்புவது, நீங்களும் உங்களுடைய குழந்தையும் பாடசாலைக்கு சிறந்ததொரு தொடக்கத்தைப் பெறக் கூடிய வகையில், உங்களுக்கு எப்படி உதவலாம் என்ற விபரத்தைப் பாடசாலை அறிந்துகொள்ள உதவும்.

உங்களுடைய குழந்தை நிரப்ப வேண்டிய ஒரு பிரிவும் கூட உள்ளது (பெரியவர் ஒருவரின் உதவியுடன் நிரப்பலாம், அந்தப் பெரியவர் நீங்களாகவோ ஆரம்பகட்ட குழந்தைப்பருவ ஆசிரியராகவோ இருக்கலாம்). இந்தப் பிரிவில் வழக்கமாக பாடசாலை பற்றி உங்களுடைய குழந்தைக்குப் பிடித்தது என்ன, பாடசாலைக்குச் செல்லத் தொடங்குவது பற்றி அவர் என்ன நினைக்கிறார் ஆகியவற்றை உள்ளடக்கும் வரைதலும் பதிவுகளும் இருக்கும்.

## எப்படி உங்களுடைய குழந்தையின் பாடசாலையுடன் தகவல் பகிரப்படும்

2018 தொடக்கம், நிலைமாற்ற அறிக்கையானது *Insight Assessment Platform* (மதிப்பீட்டுக் கருவிகள்/உபகரணங்களைக் கொண்டிருக்கும் ஒன்லைன் பணித்தளம்)-இல் வழங்கப்படும் ஒன்லைன் கருவியை உபயோகித்தே பூர்த்தி செய்யப்படும், பகிரப்படும் மற்றும் சேமிக்கப்படும். *Insight Assessment Platform* இல் வழங்கப்படும் சகல தகவலும் அவுஸ்திரேலியாவுக்குள் பாதுகாப்பாகச் சேமிக்கப்படும்.

*Insight Assessment Platform* ஆனது விக்ரோறிய அரசாங்கப் பாடசாலைகள் அனைத்திலும் ஏற்கனவே உபயோகத்தில் உள்ளது, இது உங்களுடைய குழந்தையின் கற்றல் மற்றும் வளர்ச்சி பற்றிய நிலைத்திருக்கும் பதிவை உருவாக்குவதற்குப் பாடசாலைகளை அனுமதிக்கும். சில கத்தோலிக்க மற்றும் தனியார் பாடசாலைகளும் கூட *Insight Assessment Platform* ஊடாக உங்களுடைய குழந்தையின்

நிலைமாற்ற அறிக்கையைப் பெறக் கூடும் அல்லது அவர்கள் உங்களுடைய குழந்தையின் ஆரம்பகட்ட குழந்தைப்பருவச் சேவைகளிடமிருந்து காகிதத்தில் அல்லது இரத்திரனியல் பிரதியைப் பெறுவார்கள்.

கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் (திணைக்களம்) தமது தொழிற்பாடுகளில் சிலவற்றை வெளிப்புற சேவை வழங்குநர்களிடம் ஒப்பந்தம் கொடுக்கிறது. இவ்வாறு நிகழும் போது, ஒப்பந்தமிடும் செயலின் ஒரு பகுதியாக தரவுப் பாதுகாப்பு நடவடிக்கைகளைத் திணைக்களம் எடுக்க வேண்டியுள்ளது. திணைக்களத்தின் தகவல் தனியுரிமைக் கொள்கையுடனான www.education.vic.gov.au/Pages/privacypolicy இணக்கத்தை உறுதிசெய்வதற்காக, *Insight Assessment Platform* இன் தனியுரிமைத் தாக்க மதிப்பீட்டைத் திணைக்களம் நடத்தியுள்ளது.

நிலைமாற்ற அறிக்கைகளிலுள்ள தகவலும் பாடசாலைச் சேர்க்கைத் தரவுகள் சிலவும் கண்காணிப்பு மற்றும் ஆராய்ச்சி நோக்கங்களுக்காக திணைக்களத்தால் உபயோகிக்கப்படலாம். இந்தத் தகவலானது புள்ளிவிவர வடிவத்தில் (உ-ம். இலக்கங்கள் மற்றும் வரைபுகள்) விளக்கப்படும், அதில் தனிப்பட்ட குழந்தைகளின் பெயர்கள் **இருக்காது**.

*Insight Assessment Platform* பற்றிய மேலதிக தகவல்களுக்கு, psts@edumail.vic.gov.au என்ற முகவரியில் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தைத் தொடர்புகொள்ளுங்கள்.

## மேலதிக தகவலுக்கு

Www.education.vic.gov.au/transitiontoschool -ஐப் பாருங்கள்

இந்த ஆவணமானது பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, அவற்றை www.education.vic.gov.au/transitiontoschool-இல் பார்க்கலாம்.